முருகப்பெருமான் துணை

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

29.08.2024

1. வானவர்கள் மகிழ்ந்து ஏற்றிட்ட
வையகம் தன்னில் ஓங்காரக்குடில்
தானதருமத்திற்கு தனி இலக்கணமாக
தனிப் பெருங்கருணை வடிவாக விளங்கிட

2. விளங்கிட கலிவாழ் மக்களெல்லாம்
விரைந்து வணங்கி வந்திட
களங்கமிலா ஞானவழித் தேறி
கடைத்தேறுவர் எனக் கூறி

3. கூறியே ஆறுமுக அரங்கன் யான்
குருவார அருளாசி தன்னை
குரோதி வேங்கை திங்கள் இரண்டாம் வார
குருவார ஆசியாக அருளிடுவேன்

4. அருளவே பிரணவக் குடிலதனில்
அரும்பணி ஆற்றும் சீடர்களே
வருங்காலம் யாவும் உங்களுக்கு
வளமாக அரங்கனும் அருளுவேன்

5. அருளுவேன் என் அவதார மகிமை
அறிந்துணர்ந்து இணைந்த உங்கள்
வருங்காலம் கேள்விக்குறியாகிவிடா
வறுமைதனை விரட்டி அவரவர்

6. அவரவர் வாழ்வின் தேவைகள்
அனைத்தும் பூர்த்தியாகும்படி
அவணியில் அற்புதம் புரிவேன்
ஆற்றல்பட நிர்வாகம் தன்னில்

7. தன்னிலே கருணை தயவை
தக்க பண்புகளை கூட்டி
என்னாளும் பின்னடைவு காணா
ஏற்றமே தந்து அருள் புரிவேன்

8. அருளவே ஓங்காரக்குடிலின்
அன்னதான சேவைக்கு மேலான
வருவாய் வழிவகைகள் காட்டி
வழங்குவேன் சர்வ சக்தி தனை

9. சக்திமிகு பிரணவக் குடிலை
சரணாகதி கொண்ட மக்கட்கு
சக்திகளும் நல்வழி கூடியே
சரவண சோதி வழிபாட்டாலே

10. வழிபாட்டாலே தானென்ற மமதை
வாராத வண்ணம் சமத்துவ
வழிவகை கூடி உயர் மக்களாக
வையகம் காக்கும் தருமவானாக

11. ஆகவே அரங்கன் யான் தேர்வு செய்யும்
ஆன்ம பலமிக்க ஞானவானாக
சகலரும் தேறி சன்மார்க்க வழி
சத்திய ஞானயுகம் படைப்பர் அரங்கமகான் யான் அருளிய அருளாசி முற்றே.

–சுபம்–